வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu





Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 08.01.2025 புதன்கிழமை | இதழ் : 08 | பக்கங்கள் : 12

# புலம்பெயர் முதலீட்டாளருக்கு பயங்கரவாதச் சட்டமே தடை!

## முற்றாக நீக்குங்கள் என்கிறார் செல்வம் எம்.பி.

கொழும்பு, ஜனவரி 08

**புலம்பெயர் மக்கள் இங்கு வந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கு பயங்கரவாத தடைச் சட்டம் தடையாக உள்ளது எனவும் இச் சட்டத்தை முற்றாக நீக்குமாறும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.**



நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

முப்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் விடு விக்கப்பட வேண்டும்.

தொல்லியல் திணைக் களம் மற்றும் வன இலாகா திணைக்களத் தால் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இந்திய முகாம்களில் உள்ள இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள னர். ஆனால் அவர்களுக்கு கடவுச் சீட்டை பெறுவ தில் தாமதம் ஏற்பட்டுள் ளது.

இலங்கையர் களை மீண்டும் 11



# இலங்கைக்கு தொடர்ச்சியாக நிதி, தொழில்நுட்ப உதவிகள்!

## ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்

கொழும்பு, ஜன. 08

இலங்கைக்கு தொடர்ச்சியான நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் 11

# இலங்கைக்கு வருகிறார் இந்தியப் பிரதமர் மோடி

## தூதுவர் சந்தோஷ் ஜா தகவல்

கொழும்பு, ஜன. 08

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த வருடத் துக்குள் இலங்கைக்கு பயணம் செய்வார் என இலங் கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித் துள்ளார்.

பத்திரிகை ஆசிரியர்களுடன் நேற்று செவ்வாய்க் கிழமை அவர் நடத்திய சந்திப்பிலேயே இந்த தக வலை கூறினார்.

இந்த பயணத்திற்கான சரியான நேரத்தை 11

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில்

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து இணக்கப்பாட்டை எட்ட 25ஆம் திகதி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 08

புதிய அரசியலமைப்பு விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து இணக்கப் பாட்டை மேற்கொள்வ தற்கான சந்திப்பை எதிர் வரும் 25 ஆம் திகதி நடத் துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன்,

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் ஆகி யோருக்கு 11



# ஊடக சுதந்திரத்தில் கைவைக்கமாட்டோம்

## அநுர அரசு திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 08

ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் கைவைக்கமாட் டோம் என உறுதியளித்துள்ளார் ஊடகத்துறை அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வரு மாறு-

ஊடக சுதந்திரத்தில் நாம் கைவைக்கமாட்டோம். எமது ஆட்சியில் ஊடகவியலாளர்களுக்கு கடு களவேனும் பாதிப்பு ஏற்படாது. ஜனநாயகம் மற் றும் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதும் மக்கள் 11

# மீளாய்வுக்குழுவின் அறிக்கைக்கு பின்பே அதானி குறித்து அடுத்த கட்டத் தீர்மானம்

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 08

இந்தியாவின் அதானி நிறுவனத்துடனான அபி விருத்தித் திட்டங்கள் குறித்து முன்னெடுக்கப் பட்ட ஆய்வை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப் பட்ட குழுவின் அறிக் கைக்கு அமையவே இது குறித்து அடுத்த கட்ட தீர் மானங்கள் எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட் டில் அவர் இத னைக் கூறினார். 11

# 14ஆம் திகதி சீனா செல்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜன. 08

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க எதிர் வரும் 14ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை சீனா விற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொள்ளவுள்ளார்.

அமைச்சரவைப் பேச் சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் அமைச்சர் களான பிமல் ரத்நாயக்க மற்றும் விஜித ஹேரத் ஆகியோரும் இந்த விஜ யத்தில் இணைந்து கொள்ள உள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# மறியலிலிருந்த 12 ரோஹிங்கியா ஏதிலிகள் முல்லைத்தீவு இடைத்தங்கல் முகாமுக்கு!

முல்லைத்தீவு, ஜன. 08

விளக்கமறியறில் வைக்கப்பட்டிருந்த 12 ரோஹிங்கியா ஏதிலிகளும் நேற்று திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து விடுவிக்கப்பட்டனர்.

குடிவரவு சட்டத்தை மீறிய குற்றச் சாட்டில் குறித்த ஏதிலிகள் 12 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், அவர்களுக்கு எதி ரான குற்றச்சாட்டுகள் பொலிஸாரால் மீளப்பெறப்பட்ட நிலையில், அவர்கள் விடுவிக்கப்பட்டு ஏனைய ஏதிலிகளுடன் தங்க வைப்பதற்காக முல்லைத்தீவு இடைத்தங்கல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (அ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் இதுவரை 747 பேர் கைது!

## விசாரணை தீவிரம் என்கிறார் அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஜன. 08

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றப்புல னாய்வு பிரிவு மற்றும் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ள விசார ணைகளில் பிரகாரம் இதுவரை 747 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என பொது மக்கள் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக இலாபம் ஈட்டும் வர்த்தகமாகவும் கடத்தல் தொழிலாகவும் மருந்துத்துறை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சாடல்

கொழும்பு, ஜன. 08

உலகிலேயே அதிக இலாபம் ஈட்டும் வர்த்தகமாகவும் கடத்தல் தொழிலாகவும் மாறியுள்ள மருந்துத்துறையில் நிலவிவரும் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதுடன் அவற்றை சீர்செய்ய முன்னின்று உழைக்கும் அனைத்து ஊழியர்களையும் பலப்படுத்தவும், அவர்களின் பாதுகாப்புக்காகவும் அரசாங்கம் நிச்சயமாக முன்நிற்கும். கடத்தல்காரர்கள் மற்றும் அவ்வாறான குழுக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு சுகாதார அமைச்சோ அரசாங்கமோ ஒருபோதும் செயல்படாது என சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக, திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த சுகாதார அமைச்சர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துப் பொருட்களின் பாதுகாப்பு, தரம் மற்றும் அவற்றின் செயல்திறன் தொடர்பில் தரநிலைகளை உறுதி செய்வதன் மூலம் சுகாதாரத் துறையை பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் தனது முதன்மையான பங்களிப்பை வழங்கி வருகிறது. மருந்துப் பொருட்கள், சுகாதாரப் பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல் திறனை உறுதிபடுத்துவதற்கான தர நிர்ணயதை கண்காணிப்பு மற்றும் சான்றுகளின் ஊடாக வழங்கி வருகிறது.

இந்நாட்டு மருந்துக் கொள்ளையை வெளிப்படுத்துவதற்காக மருந்து நிறுவனங்களுடன் அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக போராடிய பேராசிரியர் சேனக பிபில இறுதியில் கொலை செய்யப்பட்டார். இந்த தருணத்தில் அவரது வீரச்செயலை நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன். அவ்வாறு இதுவரை கொலைகள் ஏதும் நடைபெறவில்லை. எனினும் கடத்தல்காரர்கள் வேறு நுணுக்கமான செயன்முறைகளை கையாண்டு தமது இலட்சியங்களை அடைவதற்காகவே செயல்படுகின்றனர். ஆகையால் அரசாங்கத்தின் திட்டத்தை சீர்குலைக்க முயல்பவர்கள் தொடர்பில் நாம் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் - என்றார்.

# பாராளுமன்ற குழுக்களுக்கு நேற்று எம்.பிக்கள் நியமனம்!

கொழும்பு, ஜன. 08

பத்தாவது பாராளுமன்றத்தில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு மற்றும் நிதி பற்றிய குழு ஆகியவற்றில் பணியாற்றுவதற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்றம் நேற்று கூடியபோது சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இதனை அறிவித்தார்.

அதற்கமைய, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களான அனில் ஜயந்த, கமகெதர திசாநாயக்க மற்றும் சுயான் ஜனக ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2024 டிசெம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமைய அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக சதுரங்க அபேசிங்க, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன மற்றும் அர்கம் இல்யாஸ் ஆகியோரும் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், இலங்கைக் கால நிலை பற்றிய பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் திறந்த பாராளுமன்ற முன்னெடுப்புக்கான பாராளுமன்ற ஒன்றியம் என்பவற்றை பத்தாவது பாராளுமன்றத்தில் மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பான பிரேரணைக்கு 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்ததாகவும் சபாநாயகர் அறிவித்தார். (அ)

# பாடசாலைகளில் சிறந்த பாடசாலை திட்டம் தொடர்பில் அரசால் மீளாய்வு

கொழும்பு, ஜன. 08

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "அருகிலுள்ள பாடசாலைகளில் சிறந்த பாடசாலை" திட்டத்தின் கீழ் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலைகள் தொடர்பில் மீளாய்வு நடத்தப்படும் என பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் தற்போது திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளை மதிப்பாய்வு செய்து வருகிறோம்.

இவற்றில் பல பாடசாலைகளில் ஓரளவு மாத்திரமே திட்டங்கள் முடிக்கப்பட்டு பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

எனவே, இந்தப் பாடசாலைகள் அனைத்தையும் நாங்கள் மதிப்பாய்வு செய்து வருகிறோம்.

எங்கள் திட்டத்தின்படி, 3 கிலோ மீட்டர் சுற்றளவில் அனைத்து சிறுவர்களும் கல்வி கற்க ஒரு ஆரம்பப் பாடசாலையையும், இதுபோன்ற பல பாடசாலைகளையும் சேர்ப்பதன் மூலம் முழு வசதியுள்ள மேல் நிலைப் பாடசாலையையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

80 வீதம் முதல் 90 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ள பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (அ)

# தொழில்நுட்ப அதிகாரிகள் இல்லை நிதிக்குழுவை நடத்த முடியவில்லை!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 08

தொழில்நுட்ப அதிகாரிகள் இல்லாததால் அரசாங்க நிதி பற்றிய குழுவை நடத்திச் செல்ல முடியாமல் உள்ளதாக அந்தக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று காலை கூடியது. இதன்போது நிதி பற்றிய குழுவின் பிரதான குறைபாடு தொடர்பில் ஹர்ஷ டி சில்வா சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

அவர் தெரிவிக்கையில்-

அரசாங்க நிதி பற்றிய குழுவின் செயற்பாடுகளை தொழில்நுட்ப அதிகாரிகள் இல்லாமை காரணமாக முன்னெடுத்துச்செல்ல முடிய வில்லை.

பிரதமர் ஹரிணி அமரசூரிய எமது குழுவுக்கு பல அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளார். அவை தொடர்பில் ஆராய முடியாதுள்ளது.

அதேபோன்று, கடந்த அரசாங்கத்தில் வரவு - செலவுத் திட்ட அலுவலகத்தை உருவாக்குவதற்கு பாராளுமன்றத்தின் ஊடாக அங்கீகாரம் பெறப்பட்டது. எனினும் அது நடத்திச் செல்லப்படவில்லை. அந்த அலுவலகம் மிக முக்கியமானதாகும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென நான் சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கிறேன். இந்த விடயம் குறித்து பாராளுமன்ற செயலாளரிடமும் கலந்துரையாடியுள்ளேன் - என்றார்.

இதேவேளை, ஹர்ஷ டி சில்வா எம்.பி. சுட்டிக்காட்டிய விடயம் தொடர்பில் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க கருத்து வெளியிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷவின் வேண்டுகோள் நியாயமானது. அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு தொழில்நுட்ப அதிகாரிகள் அவசியம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அதற்கான வெற்றிடங் களை எவ்வாறு நிரப்புவது என்பது தொடர்பில் சபாநாயகரும் குழுவின் தலைவரும் இணைந்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)

# போலி வைத்தியர்களை கண்டறிய நடவடிக்கை

கொழும்பு, ஜன. 08

நாட்டில் உள்ள போலி வைத்தியர்களை கண்டறிவதற்கான விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன்போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சித்ரால் பெர்னாண்டோவின் கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதில் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் வைத்தியர்களை பதிவு செய்வதற்காக சில வைத்திய சங்கங்கள் இயங்குகின்றன. அவற்றில் பதிவு செய்யப்படாத வைத்தியர்களும் சேவையில் ஈடுபடுகிறார்கள்.

மொத்தமாக 40 ஆயிரம் போலி வைத்தியர்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆயினும் போலி வைத்தியர்கள் இயங்கி வருகிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

அவர்களை கண்டறிவதற்கான விசேட நடவடிக்கைகள் சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பில் தகவல் தெரிந்தால் எமக்கு அறியத்தருமாறு பொதுமக்களிடம் நாம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (அ)

# யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே மேலதிகமாக இரு ரயில் சேவைகள்

வவுனியா, ஜன.08

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே மேலதிகமாக இரண்டு ரயில் சேவைகளை ஆரம்பிக்க வுள்ளதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே நீண்டகாலமாக ஒரேயொரு ரயில் சேவை மட்டுமே இடம்பெற்று வருவதால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இந்த நிலையில், இது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் பொது மக்களால் என்னிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஆராய்ந்திருந்ததுடன், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

எனது வேண்டுகோளுக்கு அமைவாக 15ஆம் திகதியில் இருந்து ஒரு ரயில் சேவையும், 31ஆம் திகதியில் இருந்து பிறிதொரு ரயில் சேவையும் ஆரம்பிக்கப்படும்"- என்றார். (எ)

# ரோகிங்கியா அகதிகளை நாடு கடத்துவது மனித உரிமைச் சட்டத்தை மீறும் செயல்!

## எதிர்க்கட்சித் தலைவர் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 08

இலங்கை அரசாங்கம் ரோகிங்கியா புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

ரோகிங்கியா புகலிட கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது, சர்வதேச பிரகடனங்கள் உடன்படிக்கைகளுக்கு முரணான விடயம் என அவர் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கம் ரோகிங்கியா புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த முயல்கின்றதா என்பதை நாங்கள் அறியவேண்டும். அரசாங்கம் அவ்வாறான தொரு மனிதாபிமானமற்ற நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அவர்களை திருப்பி அனுப்புவது சர்வதேச மனித உரிமை சட்டத்தினை மீறும் செயல்.

ரோகிங்கியா இனத்தவர்கள் பாரபட்சம், வன்முறைகள் போன்றவற்றை எதிர்கொண்டுள்ளனர் என்பதை முழு உல கமும் ஏற்றுக்கொண்டுள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.01.2025 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

## ஏன் தமிழர் தரப்போடு பேசவேண்டும்?

அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகள் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அண்மையில் தெரிவித்திருந்தார். அதேவேளை, விரைவில் அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் கட்சிகளுடன் பேசவுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகின்றார். தமிழ் மக்கள் பேரவையின் கீழ் முன்வைக்கப்பட்ட தீர்வோலோசனையை அடிப்படையாகக் கொண்டு அனைத்து கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்பதுதான் கஜேந்திரகுமாரின் எதிர்பார்ப்பு.

ஒரு நாடாளுமன்ற உறுப்புரிமையுடன் இருக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தன்னுடைய நிபந்தனைக்கு எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதான தமிழ் தரப்பாக இருக்கும் தமிழ் அரசுக் கட்சியை இசைந்து வருமாறு அழைக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிவரும் கட்சிகளுக்கிடையிலான ஒன்றுபடுத்தல் பற்றியே பேசப்படுகின்றது. உண்மையில் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரு யதார்த்தமான அரசியல் புள்ளியில் சந்திப்பதுதான் சரியானது - அதுதான் இன்றைய சூழலுக்குத் தேவையானது. ஆனால், அது பற்றி சிந்திக்குமளவுக்கு தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் இன்னும் முன்னேற்றமடையவில்லை.

வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திக்கவேண்டும் என்று கூறுவதானது, தேர்தல் கூட்டு பற்றியதல்ல - மாறாக, தமிழ்மக்களின் இன்றைய அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கான சாத்தியமான விடயங்களை கையாளும் நோக்கம் கொண்டதாகவே இருக்கவேண்டும். இவ்வாறு கூறுவதற்கு ஒரு காரணமுண்டு. ஏனெனில் இன்றைய சூழலில் அரசாங்கம் ஏன் தமிழ் தேசியம் பேசும் கட்சிகளோடு பேசவேண்டும்? அதற்கான அழுத்தங்கள் என்ன? ஒப்பீட்டடிப்படையில் முன்னர் ஓரளவு சர்வதேச அழுத்தங்கள் இருந்தது உண்மைதான். ராஜபக்ஷக்களின் சீன சார்ப்பும் அவர்களது எதேச்சாதிகார அணுகுமுறைகளும் மேற்குலகை சற்று கடும் தொனியில் பேச வைத்தது ஆனால், ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நிலைமைகள் வேகமாக மாற்றமடைந்துவிட்டன.

குறிப்பாக தமிழ் மக்களின் விவகாரம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. தமிழர் தரப்புகள் மீது வெளியார் நம்பிக்கை வைக்கக் கூடிய நிலைமையும் முன்னரைப் போல் இல்லை. 2009இல் யுத்தம் முடிவுற்ற போது பாதிக்கப்பட்ட மக்கள் என்னுமடிப்படையில் காணப்பட்ட பரிதாப உணர்வு இப்போது பெருமளவில் குறைந்துவிட்டது. இதற்கு தமிழ் தேசிய அரசியலை பிரதிநித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட கட்சிகளின் அரசியல் முதிர்சியின்மையும், பதவிப் போட்டிகளும் பிரதான காரணங்களாகும்.

இராஜதந்திர சமூகம் நம்பிக்கையுடன் அணுகக் கூடிய ஒரு தமிழ் தலைவர் இப்போதில்லை. விமர்சனங்களுக்கு அப்பால் சம்பந்தன் இருக்கும் வரையில் சம்பந்தன் குறிப்பிடத்தக்களவு இராஜதந்திர அந்தஸ்துள்ள தமிழ் தலைவராக அங்கீகரிக்கப்பட்டிருந்தார். இன்றுள்ள தலைவர்கள் என்போரில் அவ்வாறான தகுதியுள்ள எவரும் இல்லை - தற்போதுள்ள நிலையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட அவ்வாறான தகுதியுடன் இல்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உண்மையிலேயே சில விடயங்கள் தொடர்பில் தமிழர் தரப்போடு பேசுவதென்றால் யாருடன் பேசுவது என்னும் நிலைமையே காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு பலவீனமான நிலையில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றி தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் ஒன்றுபடுவது என்பதற்கு அரசியல் ரீதியில் எவ்வித பொருளும் இல்லை.

ஒருவேளை மூன்று கட்சிகள் ஒன்றுபட்டாலும் கூட, இவர்களோடு பேச வேண்டிய எந்தவோர் அவசியமும் அரசாங்கத்திற்கில்லை. ஆனால், வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் வரலாற்றில் அதிசயமாக ஒரு விடயத்தில் ஒன்றுபட்டு நிற்குமானால், அதன் மூலம் ஒரு சிறிய அழுத்தத்தை ஏற்படுத்தலாம். ஆனால், அந்த ஒன்றுபடுத்தல் கூட, இருப்பதை அமுல்படுத்துங்கள் என்னும் கோரிக்கையின் அடிப்படையில் அமைந்திருந்தால் மட்டும்தான், அதன் மூலம் அரசாங்கத்திற்கு சில நெருக்கடிகளை வழங்க முடியும். எனவே அரசியல் தீர்வு பற்றி ஆராய்வதற்கு முன்னர் உங்களுடன் ஏன் அரசாங்கம் பேச வேண்டும் - பேச வேண்டிய அரசியல் நிர்பந்தத்தை ஏற்படுத்த முடியுமா என்று சிந்தியுங்கள்.

## நெடுங்கேணியில் அறநெறி பாடசாலைக்கு ரூ.950,000 செலவில் புதிய கட்டடம் அமைப்பு

### சந்நிதியான் ஆச்சிரமம் உதவி



வடமராட்சி,ஜன.7

சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு - நெடுங்கேணி தண்டுவான் வெள்ளைப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலைக்கு 950,000 ரூபாய் செலவில் கட்டடம் நிர்மாணம் செய்து வழங்கப்பட்டது.

அறநெறிப் பாடசாலை இணைப்பாளர் அ. சுகந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜதீஸ், கிராம உத்தியோகத்தர் லினிசா மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-02)

## அராலி வீதி மதகில் பாரிய குழி!

### கொங்கிரீட் தட்டில் கம்பிகள் இல்லாததால் மக்கள் அதிர்ச்சி



யாழ்ப்பாணம், ஜன.08

அராலி பாலத்தில் இருந்து அராலி துறைக்கு செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று பெரும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான வீதியாக காணப்படுகிறது. அத்துடன் 789 வழித்தட பேருந்து பயணிக்கும் பிரதான வீதியாகவும் இது காணப்படுகிறது.

இந்த வீதியில் உள்ள மதகில் சுமார் இரண்டு அடி நீளமும் ஒன்றரை அடி அகலத்திலும் பெரும் குழி காணப்படுகின்றது. கொங்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது. இருப்பினும் கொங்கிரீட் தகட்டுக்கு உள்ளே கம்பிகள் காணப்படவில்லை. முன்னர் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகளின் தரமற்ற தன்மையையே இது எடுத்துக் காட்டுவதுடன் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (எ-05)

## நீண்டகாலமாக தேடப்பட்டு வந்தவர் மருதங்கேணி பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜன.08


திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புள்ளதாக சந்தேகிக்கப்படும், வடமராட்சி - குடத்தனை, மாளிகைத்திடல் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் கம்பனியின் சொத்துகள், ஆவணங்கள், தொலைபேசி மற்றும் ஒரு தொகை பணம் என்பனவற்றை திருடிய சம்பவத்தின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


குறித்த நபரை கைது செய்ய சென்ற பொலிஸாரை தாக்கியதுடன் தப்பியோட முயன்றதாகவும் பொலிஸார் கூறினர்.

பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குறித்த நபரை மருதங்கேணி பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். சிறப்பான நாள்.

**மிதுனம்**
உணர்ச்சிவசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப்பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் கள், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் முன்கோபத்தால் பகை உண்டாகும்.

**சிம்மம்**
மூத்த சகோதரர் வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். ஆன் மிக நாட்டம் அதிகரிக்கும். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்பு தொல்லை குறையும். வேற்றுமதத்தவர்கள் நண்பர்களாவார்கள். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**மகரம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது.

# சர்வதேச விவாதப் போட்டியில் தமிழ் மாணவர் அணி அசத்தல்




யாழ்ப்பாணம்,ஜன.08

சர்வதேச விவாதப் போட்டியில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களை கொண்ட அறிவியல் தமிழ் அணி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

மலேசியா திரங்கானு பல்கலைக்கழகம், சர்வதேச தமிழ் இளையோர் மாநாட்டை முன்னிட்டு நடத்திய அனைத்துலக விண்ணரங்க சொற்போர் விவாத போட்டியில் குறித்த அறிவியல் தமிழ் அணி முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் சுற்றுகளில் முறையே இந்தியா, சிங்கப்பூர், மலேசியா அணிகளை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இந்த நிலையில் இறுதிப் போட்டியில் இந்தியாவுடன் மோதிய இலங்கை அணி தோல்வியடைந்தது. இருப்பினும், சர்வதேச விவாதப் போட்டியில் இரண்டாமிடம் பெற்று அசத்தியது. (எ)

நிலத்தில் கிடந்த தங்க நகையை எடுத்துக்கொடுத்த

# நபர் ஒருவரை கட்டிவைத்து தாக்கிய ஐந்து பேர் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஜன.08

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் ஒருவரை கட்டி வைத்து தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வெளியான காணொலியை அடிப்படையாக கொண்டு கோப்பாய் பொலிஸாரால் மூன்று பேரும், யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இரண்டு பேரும் என மொத்தம் ஐவர் செய்யப்பட்டனர்.

கடந்த வாரம் உரும்பிராய் பகுதியில் உள்ள வெதுப்பக மொன்றுக்கு வந்த ஒருவர் அப் பகுதியில் நிலத்தில் விழுந்து கிடந்த தங்க ஆபரணத்தை எடுத்து வெதுப்பகத்தில் வழங்கியுள்ளார். சில தினங்களுக்கு பின்னர் அடிக்கடி நகை உரியவர்களிடம் வழங்கப்பட்டதா? என வெதுப்பகத்தில் கேள்வியெழுப்பியுள்ளார். இந்த நிலையில், வெதுப்பகத்தில் இருந்த இளைஞர் குழு குறித்த நபரை கட்டிவைத்து தாக்கி காணொலியை வெளியிட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்தனர். (எ-05)

# மின்சார சபையின் செயல்பாடுகள் மக்களுக்கானதாக இருக்க வேண்டும்

## பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் அனுசியா

யாழ்ப்பாணம், ஜன.08

அரச நிறுவனங்கள் மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர மக்களின் சுமைகளாக இருக்கக் கூடாது. இலங்கை மின்சார சபையும் மக்களுக்கானதாக இருக்க வேண்டும் என்பது மக்களது எதிர்பார்ப்பாக உள்ளது என்று பெண்கள் வலையமைப்பின் தேசிய மட்ட தமிழ்ப் பிரிவின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திருமதி அனுசியா ஜெயகாந் வலியுறுத்தியுள்ளார்.

மின்சார கட்டண திருத்த முன்மொழிவு தொடர்பில் வடக்கு மாகாண பொதுமக்களின் ஆலோசனை கேட்கும் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். "மக்களின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறையிடத்துடன் இன்று மின்சாரமும் ஒன்றாக இணைந்துள்ளது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தளவில் மின்சாரக் கட்டண அதிகரிப்பால் சாதாரண மக்கள் முதல் சிறு தொழில் முயற்சியாளர்கள், ஏன் பல பெரு நிறுவனங்கள் கூட அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக, யாழ்ப்பாண மக்களில் அதிகமானோர் வறுமை மட்டத்தில் குறிப்பாக அரசின் சலுகைகளை நம்பியே இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

வீடுகளை கட்டுவதற்குக் கூட அரசின் உதவித் திட்டங்களை நம்பியே இருக்கின்ற நிலையில், கொடுக்கப்பட்ட அந்த வீடுகள் கூட இன்னமும் முழுமையாக முடியாத நிலையில் கடனாளிகளாக உள்ளனர். இந்த நிலையில் எவ்வாறு அவர்கள் மின் இணைப்பை பெறுவது?"- என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

# யாழ்ப்பாணம் சுகாதார நகர திட்ட முன்னேற்றம் குறித்து கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஜன.08

யாழ்ப்பாணம் சுகாதார நகர திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான கலந்தாய்வு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, உலக சுகாதார நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட விடயப் பரப்புகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களின் பாவனையை மட்டுப்படுத்துவதன் தேவைப்பாடு குறித்தும் ஆராயப்பட்டதுடன் யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள சில வீதிகளை ஒருவழிப்பாதையாக்குவதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.இது தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளரை ஊடாக குழு அமைத்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.(எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளின் தவறை மறைக்க எமக்கு ஒட்டப்படும் மாபியா முத்திரை!

## டட்லி சிறிசேன கடும் விசனம்

கொழும்பு, ஜன. 08

**திறமையற்ற அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் தவறான செயற்பாடுகளை மூடி மறைக்க என்னைப் போன்று சுய முயற்சியில் முன்வந்தவர்கள் அன்றிலிருந்து பல கதைகளை கேட்டுள்ளதாக அரலிய அரிசி ஆலையின் உரிமையாளர் டட்லி சிறிசேன தெரிவித்தார்.**



உலகிலேயே மிகப்பெரிய அரிசி சேமித்து வைக்கும் வசதி கொண்ட அரிசி ஆலையை நாட்டுக்கு கொடுத்தும், 'மாபியா' என்ற முத்திரையை ஒட்டுகிறார்கள் என அவர் விசனம் வெளியிட்டார்.

தனது சமூக ஊடக கணக்கில் பதிவொன்றை முன்வைத்து அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் குறித்த பதிவில்-

அன்றிலிருந்து திறமையற்ற அரசியல்வாதிகளின் மற்றும் அரச அதிகாரிகளின் தவறுகளை மறைக்க எங்களைப் போன்று சுய முயற்சியில் முன்வந்தவர்கள் பல கதைகளை கேட்டுக்கொண்டார்கள் .

உலகிலேயே பெரிய அரிசி சேமித்து வைக்கும் வசதி கொண்ட அரிசி ஆலையை நாட்டுக்கு கொடுத்தும், 'மாபியா' என்ற முத்திரையை ஒட்டி நாட்டுக்காக உழைத்த திருப்தியை நான் இன்னும் அனுபவித்து வருகிறேன்.

ஆனால், இன்று போல் நாளையும் நாட்டுக்காக உழைப்பேன். நாட்டுக்காக முதலீடு செய்வேன்.

ஏனெனில், நானும் எனது மகன் திமித்ர உள்ளடங் கிய குழுவினருக்கு இந்த நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உண்மையான ஆசை இன்னும் இருக்கிறது." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மக்களை இழிவுபடுத்தும் தேசிய மக்கள் சக்தி

## சாடுகிறார் சமீர பெரேரா

கொழும்பு, ஜன. 08

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் மக்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு வருவதாக தொழிலாளர் மக்கள் முன்னணியின் தலைவர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

குரங்கு இறைச்சி சாப்பிடும் அளவுக்கு இந்த நாட்டு மக்கள் தாழ்ந்து போகவில்லை என அவர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் எனக் கூறிக் கொள்ளும் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் புறொய்லர் இறைச்சி இறக்குமதியை நிறுத்தினால் குரங்கு, மயில் மற்றும் மர அணில் பிரச்னைக்கு தீர்வு வழங்க முடியும் என குறிப்பிட்டுள்ளதாக சமீர பெரேரா சுட்டிக்காட்டினார்.

இந்த பேராசிரியர் தனது பட்டச் சான்றிதழை இறைச்சிக் கடையில் பெற்றுக்கொண்டாரா தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மருத்துவமனைகளுக்கு அருகாமையில் சவப்பெட்டி கடைகள் காணப்படுவது மக்களுக்காகவே என கெஹலிய மக்களை இழிவுபடுத்தியிருந்தார்.

அதனைவிடவும் மோசமான வகையில் குறித்த பேராசிரியர் மக்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாக சமீர பெரேரா தெரிவித்தார். (அ)

# அரசியலில் இருந்து விலகப்போவதில்லை

## கூறுகிறார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, ஜன. 08

தான் அரசியலிலிருந்து விலகப்போவதில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எதிர்வரும் தேர்தல்களை எதிர்கொள்ளும் அளவிற்கு பலமாக கட்சியாக எம்முடைய கட்சியை மாற்றியமைக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அத்துடன், நான் அரசியலிலிருந்து விடைபெறப்போவதில்லை. ஜனாதிபதியும் அரசாங்கமும் ஒன்று தானே, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் மக்களே பலத்தை வழங்கியுள்ளது. அதற்கான பிரதிபலன் மக்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே அரசாங்கம் சிறந்ததா இல்லையா என்பதை நாட்டு மக்களே



தெரிந்து கொள்வர். ஆகவே மக்கள் எவ்வள்ளவு காலம் ஆட்சியில் இந்த அரசாங்கத்தை வைத்திருக்கின்றார்களோ அவ்வள்ளவு காலத்திற்கு அரசாங்கம் பயணிக்கும்.

நாட்டு மக்கள் பாரிய மாற்றத்தை எதிர்பார்த்தனர். ஆகவே அந்த மாற்றத்திற்கு இடமளித்து விகியுள்ளோம்.

மக்கள் நம்பிக்கையை வெல்லவல்ல அளவுக்கு கட்சியை மறுசீர மைக்க நடவடிக்கை எடுப் போம். உண்மையே வெல்லும்-என்றார். (அ)

# ரஷ்ய இராணுவத்தில் கட்டாயமாக இணைப்பட்டோரை மீட்டு உதவுக!

## கொழும்பில் கவனயீர்ப்பு பேர்ராட்டம்

கொழும்பு, ஜன. 08

ரஷ்யப்படையில் வலிந்து இணைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கோரி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும், வெளிவிவகார அமைச்சுக்கு முன்பாகவும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ரஷ்யப் படையில் வலிந்து இணைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களின் தாய்மாரும், வென்னப்புவவைச் சேர்ந்த தாயொருவரும், வலிந்து இணைக்கப்பட்டு காயமடைந்துள்ள கணவருக்காக முல்லைத்தீவைச் சேர்ந்த அவரது துணைவியார் ஒருவருமாக ஐவர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டத்தில் சிவில் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான ஷெரீன் சரூர், சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம், ராஜ்குமார் ரஜீவ்காந் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதியின் பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் கமகே அவர்களை




அங்கு வந்து சந்தித்தார்.

அச்சந்திப்பின்போது ஏலவே டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி கையளிக்கப்பட்ட குறித்த விடயம் சம்பந்தமான கடிதத்துக்கு உரிய பதில்கள் கிடைக்காமையினாலேயே போராட்டத்தில் ஈடுபடவேண்டிய தேவை ஏற்பட்டதாக போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

குறித்த விடயம் வெளிவிவகார அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதோடு அந்த அமைச்சே விடயத்தைக் கையாள்வதாகவும் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, போராட்டக்காரர்கள் வெளிவிவகார அமைச்சுக்குச் சென்றிருந்ததோடு அமைச்சின் சுற்றுவட்டத்தில் பதாகைகளை தாங்கியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில், வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் வருகை தந்து போராட்டக்காரர்களின் கோரிக்கையை கேட்டறிந்ததோடு அவர்களை அமைச்சருடன் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து வெளிவிவகார பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா போராட்டக்காரர்களை அழைத்து சந்திப்பை நடத்தியதோடு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உத்தியோகபூர்வ இல்லத்தை இதுவரையில் பயன்படுத்தாத சபாநாயகர் விக்கிரமரத்ன

கொழும்பு, ஜன. 08

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபாநாயகருக்கு உரிய உத்தியோகபூர்வ இல்லத்தை இதுவரை பயன்படுத்தவில்லை என பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி அவர் 10ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார்.

எனினும், அன்று தொடக்கம் இன்று வரை அவர் பாராளுமன்றத்துக்கு அருகில் உள்ள சபாநாயகர் இல்லத்தை பயன்படுத்தவில்லை.

பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் தினங்களில் மாத்திரமன்றி இடம்பெறாத சில தினங்களிலும் அவர் பாராளுமன்றத்துக்கு வருகை தருவதாகவும் சபாநாயகர் எங்கு தங்கியுள்ளார் என்பது தொடர்பில் பாராளுமன்ற ஊழியர்களுக்கும் தெரியாது எனவும் அறியக்கிடைத்துள்ளது.

ஜகத் விக்கிரமரத்ன கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பொலநறுவை மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவான நிலையில் அசோக ரன்வல இராஜினாமா செய்ததையடுத்து சபாநாயகராக பதவியேற்றார். (அ)

# கருக்கலைப்பு மாத்திரை விற்பனை செய்தவர் கைது

கொழும்பு, ஜன. 08

நுவரெலியாவில் கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்த மருந்தகத்தின் உரிமையாளர் நுவரெலியா பிரிவு ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் மற்றும் நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரியினால் கைது செய்யப்பட்டார்.

சட்ட விரோத கருக்கலைப்பு மாத்திரையை 15,000 ரூபாய்க்கு மருந்தக உரிமையாளர் விற்பனை செய்வதாக பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஒழிப்புப் பிரிவின் நிலைய அதிகாரி மேனன் தெரிவித்தார்.

சந்தேக நபரின் மருந்தகத்தில் விற்பனைக்காக ஏராளமான கருக்கலைப்பு மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்-சஜித் ஒன்றிணைந்து செயற்பட சாத்தியம் அதிகம்!

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, ஜன. 08

**ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவதற்குரிய சாத்தியம் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**



எவ்வாறு இணைவது என்பது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-இரு தரப்பும் இணைந்து செயற்பட வேண்டும் என கட்சி ஆதரவாளர்கள் கோருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி தற்போது கூட்டணியாகவே செயற்படுகின்றது.

எனவே, இந்த இணைவு பற்றியும் ஆராயப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்திக்கு 45 எம்.பிக்கள் உள்ளனர். மாற்று கட்சிகளுக்கு செல்லவேண்டிய தேவைப்பாடு எமக்கு கிடையாது. எனவே, கூட்டணி பற்றியே கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ)

# இணையம் ஊடாக பணமோசடி செய்த தம்பதி தொடர்ந்தும் விளக்கமறியலில்!

கொழும்பு, ஜன. 08

இணையத்தின் ஊடாக 200 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தம்பதியரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கின்போது குற்றப் புலனாய்வு திணைக்களம் சார்பில் முன்னிலையான அதிகாரிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளித்து குறித்த சந்தேக நபர்கள் இணையத்தளம் ஊடாக பண வைப்புகளைப் பெற்று 260 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டால் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படக்கூடும், எனவே பிணை கோரிக்கைகளை நிராகரித்து சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

எனவே குறித்த வழக்கு தொடர்பாக பரிசீலித்த நீதவான், சந்தேக நபர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அன்றைய தினம் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (அ)

# 13 இலட்சம் ரூபாயையும் தாண்டிய தனிநபர் கடன்!

கொழும்பு, ஜன. 08

அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் செலுத்தப்பட வேண்டிய மொத்த பொதுக் கடன் தொகை 29,150 பில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் ஒப்பிடுகையில் இது 6.47 வீத அதிகரிப்பாகும் என கணக்காய்வாளர் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

2023ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 31,951 மில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்டுள்ளதுடன் 75 இலட்சத்து 41,282 மில்லியன் ரூபா திறைசேரி உண்டியல்கள் மூலமாகவும் பெறப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கையின் படி, 2023ஆம் ஆண்டு தனிநபர் கடன் பெறுமதியும் அதிகரித்துள்ளதாகவும், அது 13 இலட்சத்து 22,793 ரூபாவாகும் எனவும் கணக்காய்வாளர் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டில், தனிநபர் கடன் தொகை 12 லட்சத்து 34,358 ஆக இருந்த நிலையில் இது ஒரு வருடத்தில் 88,435 ரூபாய் அதாவது 7.16 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் வெளிநாட்டு கையிருப்பு அளவு வலுவாக இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். (அ)

# இறக்குமதி செய்துள்ள அரிசியை சமைத்து சாப்பிட்டு காட்டுங்கள்!

## அமைச்சருக்கு சவால் விடும் அசேல சம்பத்

கொழும்பு, ஜன. 08

இறக்குமதி செய்திருக்கும் சிவப்பு பச்சை அரிசி மக்களுக்கு பயன்படுத்த முடியாத நிலையிலேயே இருக்கிறது. வர்த்தக அமைச்சர் இந்த அரிசி சமைத்து சாப்பிட்டு காட்டட்டும் என தேசிய நுகர்வோர் முன்னணியின் ஏற்பாட்டாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் சந்தையில் மரக்கறி விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. ஆனால் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கே மரக்கறி வகைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

அதேபோன்று வர்த்தக மத்திய நிலையங்களில் விற்பனை செய்யப்படும் மரக்கறி விலையைவிட அதிக விலைக்கே வெளிப்பிரதேசங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

பல வருடங்களாக இந்த மாபியா இடம்பெற்று வருகிறது. நுகர்வோரை உறிஞ்சும் மாபியாவை கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியாமல் போயிருக்கிறது.

அதேபோன்று சிவப்பு பச்சை அரிசி இன்று சந்தையில் இல்லை. அதேநேரம் சந்தையில் இருக்கும் இறக்குமதி செய்திருக்கும் சிவப்பு பச்சை அரிசி மிருகங்களுக்கும் சாப்பிட முடியாத நிலையிலேயே இருக்கிறது.

வர்த்தக அமைச்சர் முடியுமானால் இந்த அரிசியை சமைத்து சாப்பிட்டு காட்டட்டும்.

அவ்வாறு செய்தால் எனது பதவியில் இருந்து விலகுவேன். நான் தெரிவிக்கும் விடயம் பொய் என்றால் இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் விசாரணை மேற்கொண்டு என்னைக் கைது செய்யட்டும்-என்றார். (அ)

# உள்ளூராட்சிமன்ற தேர்தல் குறித்த வரைவு சட்டமூலம் வர்த்தமானியில்!

கொழும்பு, ஜன. 08

2023 தேர்தலுக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கும் புதிய வேட்புமனுக்களை கோருவதற்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான வரைவு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வரைவு சட்டமூலம் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக பின்னர் ஒரு திகதியில் சமர்ப்பிக்கப்படவும் உள்ளது.

2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத் திருத்தச் சட்டமூலம் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவுக்கு அமைய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்டமூலத்தின் பிரகாரம், 2023 மார்ச் 09 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியாகாது.

ஒரு அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்களைப் பொறுத்தவரையில் கட்டப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறவும் இந்த வர்த்தமானி வழிவகை செய்கிறது.

அதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. (அ)

# மனித பாவனைக்கு உதவாத 12,000 கிலோ தேயிலை மீட்பு!

கொழும்பு, ஜன. 08

உடுநுவர, தவுலகல ஹன்டெஸ்ஸ பிரதேசத்திலுள்ள தேயிலை களஞ்சியசாலைகளில் மனித பாவனைக்குதவாத 12000 கிலோ நிறை கொண்ட தேயிலை தூள்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கம்பளை முகாம் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அனுமதியின்றி இரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த குறித்த கழிவுத் தேயிலை தூள் 426 பொலித்தீன் பைகளில் பொதியிடப்பட்டிருந்துள்ளது.

கம்பளை விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நளின் உதாரப்பவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த களஞ்சியசாலைகள் சோதனையிடப்பட்டன.

இந்த தேயிலையுடன் அதன் உரிமையாளரும் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தவுலகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு !

கொழும்பு, ஜன. 08

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டாரப்பல வீதியில் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை நடத்தப்பட்ட குறித்த துப்பாக்கிச் சூட்டில் 36 மற்றும் 20 வயதுடைய இரு நபர்கள் உயிரிழந்துள்ளதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்(அ)

# பழைய பொலிஸ் தலைமையகத்தில் சி.சி.ரி.வி. கமெராக்கள் காணவில்லை

கொழும்பு, ஜன. 08

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள பழைய பொலிஸ் தலைமையகத்தில் பொருத்தப்பட்டிருந்த 07 சி.சி.ரி.வி கமெராக்கள் காணாமல் போயுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம், கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

தற்போது பொலிஸ் தலைமையகம் கொம்பனி வீதியில் உள்ள பழைய விமானப்படை தளத்தில் நிறுவப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தை அந்த இடத்துக்கு கொண்டு சென்றதன் பின் இந்த சிசிரிவி கமெராக்கள் காணாமல் போயுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பழைய பொலிஸ் தலைமையகத்தின் 5ஆவது மாடியில் இந்த சிசிரிவி கமெராக்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும், அவற்றின் பெறுமதி இதுவரை கணக்கிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவுக்கு அளித்த வாக்குறுதியை அநுர அரசும் காப்பாற்றவேண்டும்!

## பின்வாங்கினால் நம்பகத்தன்மை கேள்விக்குறி என்கிறார் அலி சப்ரி

கொழும்பு, ஜன. 08

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான உள்ளகப் பொறிமுறையொன்றை நிறுவுவதாகத் தமது அரசாங்கம் வாக்குறுதியளித்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எனவே தற்போதைய அரசாங்கம் அவ்வாக்குறுதியிலிருந்து பின்வாங்கும் பட்சத்தில் இலங்கை அரசாங்கம் மீதான நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்படும் என விசனம் வெளியிட்டார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-பாதிக்கப்பட்ட மக்கள் அவர்களுக்குரிய பதிலோ அல்லது நீதியோ இன்றிக் காத்திருக்கின்றனர். எனவே அவர்களுக்கான தீர்வை வழங்குவதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறையொன்று இயங்கவேண்டியது அவசியம்.

அதேபோன்று இதுவொரு அரசியல் சார்ந்த விடயமல்ல. ஆகவே உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதை இலக்காகக் கொண்டு கடந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவந்த நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் தொடர வேண்டும்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான உள்ளகப் பொறிமுறையொன்றை நிறுவுவதாக எமது அரசாங்கம் வாக்குறுதியளித்திருக்கிறது.

எனவே தற்போதைய அரசாங்கம் அவ் வாக்குறுதியிலிருந்து பின் வாங்கும் பட்சத்தில் இலங்கை அர சாங்கம் மீதான நம்பகத் தன்மை கேள்விக்குள்ளாக் கப்படும்-என்றார். (அ)

# பெரும்போக நெல் கொள்வனவு இம் மாத இறுதி வாரம் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 08

பெரும்போகத்திற்கான நெல் கொள்வனவு இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய, தற்போது நெல் களஞ்சியசாலைகளைச் சுத்தப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார். 3 இலட்சம் மெற்றிக் தொன் நெல் களஞ்சியப்படுத்தக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அத் துடன் நெல் சந்தைப்படுத்தல் சபை உள்ளிட்ட வர்த்தக அமைச்சுக்குச் சொந்தமான கட்டடங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை யின் தலைவர் மஞ்சுள பின்ன லந்த கூறினார். (அ)

# பஸ் மிதிபலகையில் பயணிக்கும் நடத்துநர்களின் மீது நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 08

பஸ் பயணத்தின்போது நடத்துநர் மிதிபலகையில் பயணிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்தார்.

இதன்படி, இனிமேல் மிதிபலகையில் பயணிக்கும் நடத்துநர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

பஸ் பயணத்தை முன்னெடுப்பதில் காணப்படும் போட்டித்தன்மை காரணமாக சில நடத்துநர்கள் அவதானமின்றி மிதிபலகையில் பயணிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்துள்ளார்.

# 5 இலட்சம் தொன் அரிசியை மறைத்து வைத்திருப்பது யார்?

கொழும்பு, ஜன. 08

நாட்டின் வருடாந்த அரிசி தேவை 23 இலட்சம் தொன் ஆகும். ஆனால் கடந்த போகத்தில் அறுவடை செய்யப்பட்ட 42 இலட்சம் தொன் நெல்லிலிருந்து 28 இலட்சம் தொன் அரிசி பெறப்பட்டுள்ளது. அவ்வாறெனில் எஞ்சிய 5 இலட்சம் தொன் அரிசியை மறைத்து வைத்திருப்பது யார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் மூலம் இனிவரும் காலங்களில் பல்வேறு விடயங்கள் தூய்மையடையவுள்ளன. அண்மையில் முன்னாள் சபாநாயகர் கிளீன் செய்யப்பட்டார். அதேபோன்று மேலும் பலர் கிளீன் செய்யப்படவுள்ளதாக தெரிகிறது. உத்தேச தேர்தல்களை எதிர்கொள்வதற்கான செயற்திட்டங்களை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கவே ஆரம்பித்துவிட்டது.

புத்தாண்டு தினத்தன்றும் பாற்சோறு சமைப்பதற்கு அரிசி இருக்கவில்லை. ஒரு வாரம் கடந்தும் இன்னும் இந்த பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படவில்லை. கடந்த போகத்தில் 42 இலட்சம் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டது. இதன் மூலம் 28 இலட்சம் தொன் அரிசியை இதிலிருந்து பெற முடியும்.

இவ்வாறான உண்மைகளை வெளிப்படுத்தும் ஊடகங்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

ஆனால் நாம் ஊடக ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக முன்னிற்போம்-என்றார். (அ)

# பொதுப்போக்குவரத்து வாகனங்களில் அபாயமான பாகங்கள் அகற்றப்படும்!

## பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜன. 08

விசேட போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையின் நீட்சியாக தற்போது பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள அபாயகரமான மேலதிக உதிரிப்பாகங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையின் மூலம் விபத்துகளை குறைத்து மக்களின் பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளோம். ஆகையால் போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கைக்கு எத்தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தாலும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல உள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

விசேட போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கை தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வாகன விபத்துக்களின் அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு கடந்த வருடம் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்புக்காக அமுல்படுத்தப்பட்ட விசேட போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கை இதுவரை செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாகன விபத்துகளால் பலர் உயிரிழப்பதையும், அங்கவீனர்களாவதையும் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அதன் நீட்சியாக பொது போக்குவரத்து வாகனங்களில் விபத்துகள் ஏற்படக்கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ள அபாயகரமான மேலதிக உதிரிபாகங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாகனங்களில் முன்புறம் பொருத்தப்பட்டுள்ள தேவைக்கு புறம்பான மின்விளக்குகள் காரணமாக எதிர்த் திசையில் இருந்து வரும் வாகனங்களை வீதியில் செலுத்த முடியாமல் போகலாம். இதனால் விபத்துகள் சம்பவிப்பதற்கும் வாய்ப்புள்ளது. கடந்த காலங்களில் வாகனங்களில் பொருத்தப்படும் மேலதிக உதிரிப்பாகங்களினால் பல விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ஆகையால் பொதுமக்களின் பாதுகாப்பை கருதி மேலதிக உதிரிப்பாகங்களை அகற்ற பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர்-என்றார். (அ)

# வெளிநாடு வாழ் இலங்கையர்களின் பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெற வசதி

கொழும்பு, ஜன. 08

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் நேற்று முன்தினம் முதல் பிறப்புச்சான்றிதழ், விவாகச் சான்றிதழ் மற்றும் மரணச் சான்றிதழ்களை இலத்திரனியல் தொழிநுட்பம் ஊடாக அந்த நாடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ள முடியும். இதன் ஆரம்பகட்டமாக 7 நாடுகளில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் டிஜிற்றல் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டமாக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு அந்த நாடுகளில் அமைந்திருக்கும் தூதரகங்கள் ஊடாக தாமதமின்றி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களை விரைவாக பெற்றுக் கொள்ள முடியுமான டிஜிற்றல் வசதியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பிறப்புச்சான்றிதழ், மரணச் சான்றிதழ் மற்றும் விவாகச் சான்றிதழ்களை இலத்திரனியல் தொழிநுட்பம் முறைமை ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். உலகம் பூராகவும் பரந்து வாழும் 35இலட்சம் இலங்கை பிரஜைகளுக்கு தங்களின் பிள்ளைகளின் பிறப்புச்சான்றிதழை நீங்கள் வாழும் இடத்தில் இருந்தே ஒரு சில நிமிடங்களில் உங்களுக்கு தற்போது பெற்றுக் கொள்ள முடியும்.

அதே போன்று உங்களது விவாக சான்றிதழ் மற்றும் உங்களது உறவினர்கள் யாராவது மரணித்தால் அவரின் மரணச் சான்றி தழை பெற்றுக் கொள்ளவும் தற் போது இலங்கைக்கு வரவேண்டிய தேவையில்லை-என்றார். (அ)

கடுமையான பனிமூட்டமான வானிலை:

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட நான்கு விமானங்கள்!

கொழும்பு, ஜன. 08

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதியில் இன்று காலை நிலவிய பனிமூட்டமான வானிலை காரணமாக நான்கு விமானங்கள் தரையிறங்குவதற்காக வேறு விமான நிலையங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

பனியுடனான வானிலை காரணமாக விமானிகளால் ஓடுபாதையைச் சரியாக அவதானிக்க முடியாமையினால் குறித்த விமானங்கள் மத்தள மற்றும் இந்தியாவின் திருவனந்தபுரம் ஆகிய விமான நிலையங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

டுபாய், சீனா, இந்தியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்குப் பயணித்த விமானங்களே இவ்வாறு வழிமாற்றப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் பனியுடனான வானிலை சீரடைந்ததன் பின்னர் குறித்த விமானங்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென முளைத்தது தொல்லியல் பதாகை

## விகாரை கட்டப்போகின்றார்களா? என மக்கள் விசனம்

வெருகல், ஜன.08

**வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திரு கோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை தொல்லியல் திணைக்களத்தினால் நடப்பட்டுள்ள பதாகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**



"1 கிலோ மீற்றர் வட்டவான் தொல்லியல் நிலையம்" என

குறிப்பிட்டு குறித்த பதாகை நடப்பட்டுள்ளது. இது, அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் எவ்வளவு பகுதி தொல்லியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது? அதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா? எதிர்காலத்தில் அப்பகுதியில் புத்த விகாரை வருமா? என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தொல்லியல் திணைக்களத்தின் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த 28. 12. 2024 அன்று இரவோடு இரவாக குச்சவெளி பகுதியில் தொல்லியல் திணைக்களத்தால் பதாகை நடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த முதலாம் திகதியன்று மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சிறுவன் அக்லான் பிலாலுக்கு கிண்ணியாவில் கௌரவிப்பு




திருகோணமலை, ஜன.08

கிண்ணியாவை சேர்ந்த அக்லான் பிலால் என்ற சிறுவன் எண் கணித அடிப்படையில் மிகப்பெரிய விளக்கங்களை கூறி சாதனை படைத்துள்ளார்.

இவரை கௌரவிக்கும் நிகழ்வு குறிஞ்சாக்கேணி அபாகஸ் நிலையத்தினால் நடைபெற்றது.

பத்தின் அடுக்கான இலக்கங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய மிகப்பெரிய இலக்கங்கள் என்பனவற்றை எண் கணித அடிப்படையில் உலகளாவிய ரீதியில் எடுத்துரைத்த முதலாவது சிறுவன் என்ற உலக சாதனையை நான்கு வயதேயான அக்கான் பிலால் தனதாக்கிக் கொண்டார்.(எ)

# அனுமதிப்பத்திரம் இன்றி மணல் கடத்தியவர் கைது

சம்மாந்துறை, ஜன.08

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக உழவியந்திரத்தில் மணல் கடத்திய நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை பகுதியில் இடம் பெற்றது.

சம்மாந்துறை பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக மணல் கடத்திய நபரை கைது செய்ததுடன் மணல் கடத்துவதற்கு பயன்படுத்திய உழவியந்திரத்தையும் பறிமுதல் செய்தனர். (எ)

# ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு தேசிய மாநாடும் கௌரவிப்பும்

திருகோணமலை, ஜன.08

"குடும்ப கட்டமைப்பைப் பேணுபவளே ஆற்றலுள்ள ஆளுமைப் பெண்" எனும் தொனிப்பொருளில் ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு நடத்திய முஸ்லிம் பெண்கள் ஆளுமைகளின் 4ஆவது தேசிய மாநாடு திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் நடைபெற்றது.

இலக்கிய வித்தகரும், அமைப்பின் தலைவியுமான சம்மாந்துறை மஷூறா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். எம். நஸீர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட். ஏ.எம். பைஷல் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் விசேட விருந்தினராகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையைச் சேர்ந்த ஏ. எப். எம்.அஸ்ரப் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில்




"பெண்ணெனும் பேராறு" என்ற தலைப்பில் சிறந்த கவியரங்கு ஒன்றும், அவரி சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற்றதுடன் "குடும்ப கட்டமைப்பைப் பேணும் ஆற்றலுள்ள ஆளுமைப் பெண்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# மூதூர் பாட்டாளிபுரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

திருகோணமலை, ஜன.08

மூதூர் பாட்டாளிபுரத்தில் எம் கடமை கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு பாட்டாளிபுரத்தில் நடைபெற்றது.

16 மாணவர்களுக்கு இவ்வாறு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (எ)



# 135 ரூபாய்க்கு நெல் கொள்வனவு செய்தால்தான் உற்பத்தி செலவையாவது பெற்றுக்கொள்ளலாம்

மட்டக்களப்பு, ஜன.08

125 ரூபாய் முதல் 135 ரூபாய் வரை நெல் கொள்வனவு செய்தால் மட்டுமே எமது உற்பத்தி செலவிலிருந்து ஓரளவு இலாபம் இல்லாவிட்டாலும் உற்பத்தி செலவையாவது பெற்றுக் கொள்ள முடியும் என்று மட்டக்களப்பு தமிழ் விவசாய சமுகத்தின் இணைப்பாளர் சிவலிங்கம் பரமேஸ்வரநாதன் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையை பொறுத்தவரையில் ஒரே ஒரு நபரை வைத்துக் கொண்டுதான் நெல் கொள்வனவு சந்தைப்படுத்தல் சபையை இயக்குகின்றார்கள். இதனை நாங்கள் ஒரு சாபக்கேடாகவே கருதுகின்றோம்.

உண்மையி லேயே 70 வீதமான விவசாயி கள் இந்த மாவட்டத்தில் இருக் கின்ற நிலையில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களில் வேளாண்மை செய்யப்படுகின்ற நிலையில் கிட்டத்தட்ட 42 பில்லியன் ரூபாய் நடைமுறையில் இருக்கின்றது.

இவ்வாறு நாட்டினுடைய மொத்த தேசிய உற்பத்திக்கு பெருமளவான பங்கு வகிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையிலே குறிப்பிட்ட ஓரிரு உத்தியோகத்தர்களை வைத்துக் கொண்டு எவ்வாறு எமது நெல்லை கணிசமான அளவு சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

# போலி நாணயத்தாளுடன் பெண் ஒருவர் சிக்கினார்

சம்மாந்துறை, ஜன.08

5,000 ரூபாய் போலி நாணயத்தாளுடன் அடகு நகையை மீட்கச் சென்ற பெண்ணை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

கல்முனை - அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த வங்கியிலிருந்து சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 29 வயது பெண் கைது செய்யப்பட்டதுடன் போலி 5,000 ரூபாய் நாணயத் தாளும் பறிமுதல் செய்யப்பட்டது. (எ)


# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

கல்முனை, ஜன.08

கேரள கஞ்சாவுடன் வீதியில் பயணித்த 34 வயது நபரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே கேரள கஞ்சாவுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதவன் வீதி பகுதியில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றதுடன் கல்முனை 03 சின்னத்தம்பி வீதியை சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபரே கைது செய்யப்பட்டவராவார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா!

ஒட்டாவா, ஜன.08

**கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். இதேவேளை, புதிய பிரதமர் தெரிவு செய்யப்படும்வரை இடைக்கால பிரதமராக தொடர்ந்து செயல்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.**



2015ஆம் ஆண்டு முதல் 9 ஆண்டுகள் கனடாவின் பிரதமராக ஜஸ்டின் செயல்பட்டு வந்தார். அதேபோன்று, லிபரல் கட்சியின் தலைவராகவும் அவர் செயல்பட்டார்.

இதனிடையே, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் செல்வாக்கு அந்த நாட்டு மக்களிடையே பெருமளவு குறைந்து வந்தது. மேலும், சொந்த கட்சிக்குள்ளும் செல்வாக்கு குறைந்தது.

கனடா பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வருகிறது. மேலும், அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்கவுள்ள நிலையில் கனடா மீது அதிக அளவில் வரி விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், நாட்டின் பொருளாதார சூழ்நிலை, சொந்த கட்சிக்குள் கடும் எதிர்ப்பு, பொதுமக்களிடம் ஆதரவு குறைவு உட்பட பல்வேறு காரணங்களால் பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்தார்.

அதே போன்று, லிபரல் கட்சியின் தலைவர் பதவியையும் அவர் இராஜினாமா செய்தார்.

இதேவேளை, நாட்டின் புதிய பிரதமர் தெரிவு செய்யப்படும்வரை இடைக்கால பிரதமராக தொடர்ந்து செயல்படுவதாக ட்ரூரோ அறிவித்துள்ளார். (எ)

## ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இரண்டாவது பிடியாணை!

டாக்கா, ஜன.08




பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இரண்டாவது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர் அமைப்பு தலைமையில் இடம் பெற்ற போராட்டம் தீவிரமடைந்த நிலையில், பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகியதுடன் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 5ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து ஷேக் ஹசீனா மற்றும் அவரது கட்சி தலைவர்கள் மீது ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த நிலையில், ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இரண்டாவது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரது ஆட்சியின்போது மர்மமான முறையில் காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்கில் ஷேக் ஹசீனா, அவரது இராணுவ ஆலோசகர், இராணுவ அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் என மொத்தம் 12 பேரை கைது செய்ய உள்நாட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.(எ)

## அமெரிக்காவில் பனிப்புயலால் பாடசாலைகளுக்கு விடுமுறை!

வாஷிங்டன்,ஜன.08



அமெரிக்காவில் கடும் பனிப்புயல் வீசி வருகிறது. இதனால், பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மிசோரி, இண்டியானா, வெர்ஜினியா, கெண்டகி, மேற்கு வெர்ஜினியா, இலினோயிஸ் உட்பட அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் பனிப்புயல் வீசி வருகிறது.

மணிக்கு 72 கிலோ மீற்றர் வேகத்தில் வீசி வரும் பனிப்புயலால் வீதி, ரயில், விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பனிப்புயலுடன், கடுமையான பனிப்பொழிவும் நிலவி வருவதால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், பனிப்புயல் காரணமாக மிசோரி, இண்டியானா, வெர்ஜினியா, கெண்டகி, மேற்கு வெர்ஜினியா ஆகிய மாகாணங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கண்ணீர்மல்கிய முதல்வர் ஆதிஷி

புதுடில்லி, ஜன.08



தனது தந்தை குறித்து பா. ஜ. க. மூத்த தலைவர் அவதூறாக பேசியதாக டில்லி முதல்வர் ஆதிஷி, செய்தியாளர்களுக்கு கண்ணீர்மல்க கருத்து வெளியிட்டார்.

டில்லி முதல்வரும் ஆம் ஆத்மி மூத்த தலைவருமான ஆதிஷி, கல்காஜி சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பா. ஜ. க. சார்பில் அந்த கட்சியின் மூத்த தலைவர் ரமேஷ் பிதுரி களமிறங்கியுள்ளார்.

ரமேஷ் பிதுரி அண்மையில் பேசும்போது, "ஆதிஷியின் தந்தை பெயர் மர்லேனா. அவர் தனது பெயரில் மர்லேனாவை மாற்றிவிட்டு சிங்கை சேர்த்திருக்கிறார்"- என்று கூறினார்.

இந்த விவகாரம் குறித்து டில்லி முதல்வர் ஆதிஷி செய்தியாளர்களுக்கு கூறுகையில், "எனது தந்தைக்கு 80 வயதாகிறது. அவர் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஆயிரக்கணக்கான ஏழை குழந்தைகளுக்கு கல்வி கற்பித்திருக்கிறார். தற்போது உடல் நலம் குன்றி நடக்க முடியாத நிலையில் உள்ளார். எனது தந்தை குறித்து பா. ஜ. க. மூத்த தலைவர் ரமேஷ் பிதுரி அவதூறாக பேசியதை கண்டிக்கிறேன். அரசியல் இந்த அளவுக்கு தரம் தாழ்ந்து போகும் என்று நினைக்கவில்லை"- என்றுகூறி கண்ணீர் மல்கினார். (எ)

## அமெரிக்காவில் முதன்முறையாக பறவை காய்ச்சலால் ஒருவர் பலி!

லூசியானா, ஜன.08

அமெரிக்காவில் பறவை காய்ச்சல் பாதிப்பால் ஒருவர் உயிரிழந்தார்.

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் வசித்து வந்த 65 வயது முதியவர் ஒருவருக்கு பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதிகம் தொற்றும் தன்மை கொண்ட எச் 5 என் 1 ரகவைரஸின் தாக்குதலுக்குள்ளான அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

## கண்ணிவெடி தாக்குதலில் 9 பேர் பலி!

புதுடில்லி,ஜன.08

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சல் அமைப்பினர் நடத்திய கண்ணிவெடி தாக்குதலில் 8 படையினர் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் மொத்தம் 33 மாவட்டங்கள் உள்ளன. இதில் 13இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நக்சல் அமைப்பினர் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்த பிரச்னைக்குத் தீர்வு காண சத்தீஸ்கர் பொலிஸார் சார்பில் கடந்த 2008ஆம் ஆண்டில் மாவட்ட ரிசர்வ் குரூப் (டி.ஆர்.ஜி) என்ற சிறப்பு படைப்பிரிவு உருவாக்கப்பட்டது. இதில் தற்போது 3,500 படையினர் உள்ளனர்.

டி.ஆர்.ஜி. படைப் பிரிவு வீரர்கள், வனப்பகுதிகளில் முகாம் அமைத்து நக்சல் அமைப்பினரை வேட்டையாடி வருகின்றனர். இதன்காரணமாக கடந்த 2008ஆம் ஆண்டு முதல் இது வரை சத்தீஸ்கரில் 80 சதவீத நக்சல் அமைப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் சுமார் 200இற்கும் மேற் பட்ட நக்சல் அமைப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் நேற்றுக்காலை நக்சல் அமைப்பினர் நடத்திய கண்ணிவெடி தாக்குதலில் 8 படையினர் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். (எ)

## நிலநடுக்கத்தால் 45 பேர் உயிரிழப்பு

புதுடில்லி, ஜன.08

நேபாளம் - திபெத், இந்தியா, சீனா, பூட்டான் உள்ளிட்ட நாடுகளில் நேற்றுக்காலை அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் 45 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தில் நேற்றுக் காலை 6. 50 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.1 ஆக பதிவாகியிருந்தது. நேபாளத்தின் லொபுசே என்ற பகுதிக்கு வடகிழக்கே 93 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் பல பகுதிகளில் கட்டடங்கள் குலுங்கின. இதனைத் தொடர்ந்து, இந்தியாவின் டில்லி, பீகார் போன்ற மாநிலங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

திபெத்தில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உட்பட 6 நிலநடுக்கங்கள் அடுத்தடுத்து ஏற்பட்டதில் 36 பேர் உயிரிழந்தனர்.

38 பேர் காயமடைந்தனர். மேற்கு சீனாவில் 9 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலநடுக்கம் இந்தியா, நேபாளம் மற்றும் பூட்டானிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. (எ)

## வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை!

சியோல், ஜன.08

வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

இந்த நிலையில், தற்போது மீண்டும் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. வடகொரியாவில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை ஆயிரத்து 100 கிலோ மீற்றர் பயணித்து வடகிழக்கு கடல் பகுதியில் விழுந்தது. 2025ஆம் ஆண்டு வடகொரியா நடத்திய முதல் ஏவுகணை சோதனை இதுவாகும். இந்த ஏவுகணை சோதனையால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி!

## டெஸ்ட் தொடரை பறிகொடுத்தது பாகிஸ்தான்



கேப்டவுன், ஜன.08

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது. இதன் மூலம், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றி அசத்தியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில், 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கேப்டவுனில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 615 ஓட்டங்கள் குவித்தது.அதிகபட்சமாக ரையான் ரிக்கெல்டன் 259 ஓட்டங்களும், தெம்பா பவுமா 106 ஓட்டங்களும், வெர்ரைன் 100 ஓட்டங்களும் அடித்தனர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸில் விளையாடிய பாகிஸ்தான் 194 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்து பாலோ ஒன் ஆனது. அதிகபட்சமாக பாபர் அஸாம் 58 ஓட்டங்கள் அடிக்க,தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் 421 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை ஆடிய பாகிஸ்தான் அணி 122.1 ஓவர்களில் 478 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷான் மசூத் 145 ஓட்டங்கள் அடித்தார். தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா, கேஷவ் மகராஜ் தலா 3 விக்கெட்களும், மார்க்கோ ஜான்சன் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணிக்கு 58 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்கா 7. 1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 61 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. டேவிட் பெடிங்ஹாம் 47 ஓட்டங்களுடனும், மார்க்ரம் 14 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா தொடரை 2 - 0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி பாகிஸ்தானை வெள்ளையடிப்பு செய்து அசத்தியது. ரையான் ரிக்கெல்டன் ஆட்ட நாயகனாகவும், மார்க்கோ ஜான்சன் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

### ஆசிய கண்டத்துக்கு வெளியே

## முதல் டெஸ்ட் தொடர் வெற்றி வரலாறு படைத்தது ஆப்கான்

புலவாயோ, ஜன.08

ஆசிய கண்டத்துக்கு வெளியே விளையாடிய முதல் டெஸ்ட் தொடரிலேயே வெற்றி பெற்று வரலாறு படைத்துள்ளது ஆப்கானிஸ்தான் அணி.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் போட்டி சமநிலையானது. 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் புலவாயோவில் நடைபெற்றது.

இதில் முதல் இன்னிங்ஸில் ஆப்கானிஸ்தான் 157 ஓட்டங்களும், சிம்பாவே 243 ஓட்டங்களும் எடுத்தன. 86 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய ஆப்கானிஸ்தான் 363 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம் சிம்பாவே அணிக்கு 278 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

ரஷித் கானின் சுழற்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 205 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் சிம்பாவே பறிகொடுத்தது. இதனால் ஆப்கானிஸ்தான் 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரஷித் கான் 7 விக்கெட்களை அள்ளினார்.

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி 1 - 0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. (எ)




## பங்களாதேஷ் வீராங்கனை இரண்டு மாதம் இடைவேளை




டாக்கா, ஜன.08

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து பங்களாதேஷ் அணியின் முன்னணி வீராங்கனை ஜஹானாரா ஆலம்இரண்டு மாதங்கள் இடைவேளை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

பங்களாதேஷ் மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஹானாரா ஆலம் (வயது -31) மனநலப் பிரச்னைகள் காரணமாக கிரிக்கெட் போட்டிகளில் இருந்து 2 மாத காலம் இடைவேளை எடுப்பதாக கூறியுள்ளார். இவரது முடிவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

இவர் பங்களாதேஷ் அணிக்காக 52 ஒருநாள் மற்றும் 83 ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத்துக்கான பங்களாதேஷ் அணியில் இடம்பெற்றிருந்தார். (எ)

## முகமது ஷமி எப்போதுதான் இந்திய அணிக்கு திரும்புவார்?

மும்பை, ஜன.08

முகமது ஷமி எப்போதுதான் இந்திய அணிக்கு திரும்புவார்? என்று பி. சி. சி. ஐக்கு முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "முகமது ஷமி விடயத்தில் பி. சி. சி. ஐ. என்ன செய்கிறது? என்பது எனக்கு புரியவில்லை. ஏனெனில் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக திகழ்ந்துவரும் முகமது ஷமி இந்திய அணிக்கு பெரிய பங்கினை வழங்கக்கூடியவர். அவரை இவ்வளவு மாதங்களாக கண்காணித்து வரும் மருத்துவ குழுவால் ஏன் இன்னும் அவரது காயத்தை முழுமையாக சரி செய்ய முடியவில்லை. அவரது விடயத்தில் பி. சி. சி. ஐ. எந்தவொரு தகவலையும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. அவர்கள்தான் முகமது ஷமியை கண்காணித்து விரைவில் குணப்படுத்தியிருக்க வேண்டும்.

முகமது ஷமி இருந்திருந்தால் அவுஸ்திரேலியாவில் பும்ரா மற்றும் சிராஜ் ஆகியோருக்கு உதவியாக இருந்திருக்கும். ஆனால், அவர் இல்லாதது இந்திய அணிக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தற்போது உள்ளூர் தொடரில் முகமது ஷமி விளையாடி வந்தாலும் அவர் தேசிய அணிக்கு திரும்புவாரா? என்பது குறித்து இன்னும் புரியாமல் இருக்கிறது. பி.சி.சி.ஐ. அவர் விடயத்தில் என்ன நினைக்கிறது? என்பது எனக்குத் தெரியவில்லை"- என்று கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி இந்தியாவில் கடந்த 2023ஆம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் கடைசியாக விளையாடியிருந்தார். (எ)

## டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் தென்னாபிரிக்க அணி முதலிடம்

டுபாய், ஜன.08

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. இதன் மூலம், டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் தென்னாபிரிக்கா கூடுதல் புள்ளிகள் பெற்ற நிலையில் முதலிடத்தில் நீடிக்கிறது. தோல்வி கண்ட பாகிஸ்தான் சில புள்ளிகளை இழந்த நிலையில் 8ஆவது இடத்தில் உள்ளது. மற்ற அணிகள் மாற்றமின்றி தொடருகின்றன.

1. தென்னாபிரிக்கா - 69. 44 சதவீதம்,2. அவுஸ்திரேலியா - 63. 73 சதவீதம்,3. இந்தியா - 50. 00 சதவீதம்,4. நியூசிலாந்து - 48. 21 சதவீதம்,5. இலங்கை - 45. 45 சதவீதம்,6. இங்கிலாந்து - 43.18 சதவீதம்,7. பங்களாதேஷ் - 31. 25 சதவீதம்,8. பாகிஸ்தான் - 27. 78 சதவீதம், 9. மேற்கு இந்திய தீவுகள் - 24.24 சதவீதம், தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேறிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## இந்தியா - அயர்லாந்து ஒருநாள் தொடர் போட்டி

### மந்தனா அணித் தலைவி

புதுடில்லி, ஜன.08

அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளை யாடவுள்ள இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.



அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாவுள்ளது. இந்தத் தொடர் வரும் 10ஆம் திகதி தொடங்குகிறது.இந்த நிலையில் இந்திய அணி அறிவிக் கப்பட்டுள்ளது. ஹர்மன்ப்ரீத் கவுர், ரேஓகா சிங் தாக்கூர் ஆகியோ ருக்கு ஒய்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால், ஸ்மிருதி மந்தனா தலைவியாகவும், தீப்தி சர்மா துணைத் தலை வியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.பிரதிகா ராவல், ஹார்லீன் தியோல், ஜெமிமா ரோட் ரிக்ஸ், உமா செத்ரி, ரிச்சா கோஷ், தேஜல் ஹசாப்னிஸ், ரக்வி பிஸ்ட், மின்னு மணி, பிரியா மிஷ்ரா, தனுஷா கன்வர், டைட்டஸ் சாது, சைமா தாக்கூர், சயாலி சத்கரே ஆகியோர் பெயர் அறி விக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடக...

எமக்கு வழங்கிய ஆணைகளுள் ஒன்றாகும். ஆதனை நாம் பாதுகாப் போம்.

ஊடகம் என்பது வேறு, ஊடகத்தை வைத்து அரசியல் செய்யும் தரப்பு என்பது வேறு. அவ்வாறு செயற்படும் சில ஊடகங்கள் உள்ளன. அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நாம் குற்றம்சாட்டிய ஊடகத்தின் பிரதானி அரசியலுடன் தொடர்புபட்டவர். அவர் கடந்த காலங்களில் எவ்வாறு செயற்பட்டார் என்பது மக்களுக்கு தெரியும்.

நாடு தற்போது சுவாசிக்க தொடங்கியுள்ளது. எனவே, மக்கள் மனங்களை மாற்றும் நோக்கி திரிவுபடுத்தப்பட்ட செய்திகளை வெளியிடக்கூடாது. அவ்வாறு செய்வது துரோகச்செயலாகும்- என்றார். (அ)

## இலங்கைக்கு...

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

ஜப்பான் உதவியில் முன்னெடுக்கப்படும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாக அபிவிருத்தி தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் ஜெய்க்கா உதவியில் முன்னெடுக்கப்படும் அனைத்து வேலைத்திட்டங்களையும் விரைவில் நிறைவு செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டுக்கு ஜப்பான் இலங்கைக்கு வழங்கிய உதவி மற்றும் எதிர்காலத்தில் இலங்கைக்கு தேவையான நிதி உதவிகளை வழங்க ஜெய்க்கா நிறுவனம் எதிர்பார்ப்பதாகவும் ஹாரா சொஹெய் மேலும் தெரிவித்தார்.

இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் முன்னணி வேலைத்திட்டமான “கிளீன் சிறிலங்கா” திட்டத்திற்கு பாராட்டு தெரிவித்த சிரேஷ்ட உப தலைவர், அந்த வேலைத்திட்டத்துக்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இந்நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் நகர தூய்மையாக்கல் பணிகளுக்கு ஜயிக்கா நிறுவனத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளக்கூடிய நிதி மற்றும் பௌதீக உதவிகள் தொடர்பிலும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (அ)

## மீளாய்வுக்...

இலங்கையில் அதானி குழுமத்தின் வலுசக்தி திட்டங்கள் குறித்த ஆய்வை மீளாய்வு செய்வதற்கு குழுவொன்றை நியமிக்க மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான முன்மொழிவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திட்டங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் உள்ளிட்ட காரணிகளை இந்தக் குழு மதிப்பாய்வு செய்யும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. முன்னதாக, இலங்கையில் அதானி குழுமத்தால் திட்டமிடப்பட்ட காற்றாலை மின் நிலைய திட்டங்கள் குறித்து மின் மற்றும் வலுசக்தி அமைச்சால் நியமிக்கப்பட்ட குழு ஆய்வு செய்தது.

மன்னார் மற்றும் பூநகரியில் முன்மொழியப்பட்டுள்ள காற்றாலை மின் திட்டங்கள் மூலம் மொத்தம் 484 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையிலேயே இவை தொடர்பில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட ஆய்வினை மீளாய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே நேற்று ஊடகவியலாளர் மாநாட்டில் இது குறித்து கேள்வியெழுப்பப்பட்ட போது அமைச்சரவை பேச்சாளர் இதனைத் தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கு வருகிறார்...

உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம் என்றும் சந்தோஷ் ஜா குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கடந்த டிசெம்பர் மாத நடுப்பகுதியில் புதுடில்லிக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டிருந்தபோது, பிரதமர் மோடியை இலங்கை வருமாறு அழைப்பை விடுத்திருந்தார். அதன் பிரகாரம் மோடியின் இலங்கை பயணம் இடம்பெற உள்ளது.

பிரதமர் மோடி 2015 ஆம் ஆண்டு மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை இலங்கைக்கு பயணம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ்...

இடையில் நடந்த சந்திப்பில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்-

இதுவரை நாங்கள் மூன்று தரப்பும் தனித்தனியாக சந்தித்து வந்த கட்டத்தில் இந்த தரப்புக்களை ஒன்றாக சந்தித்து இணக்கப்பாட்டை எட்ட எண்ணியுள்ளோம். இந்த மூன்று கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் அந்தந்த கட்சிகள் இந்த முயற்சிக்கு யாரைக் கொண்டுவரவேண்டும் என்று விரும்புகின்றனவோ அவர்கள் அந்த தரப்புகளைச் சேர்த்துக்கொள்ளலாம். இந்த சந்திப்பு ஒரு ஆக்கபூர்வமான சந்திப்பாக அமையவேண்டும். இந்த மூன்று தரப்புகளுக்கும் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய ஆணையை வழங்கியுள்ள நிலையில் அந்த ஆணையை முழுமையாக பிரதிபலிக்கக்கூடிய ஒரு பொது நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தேவைப்படும் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் நோக்கோடுதான் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. - என்றார். (அ)

## ஈஸ்டர்...

பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் தேசிய மக்கள் சக்தியின் எம்.பி. அஜித் கிஹான் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் ஆனந்த விஜேபால இவ்வாறு கூறினார்.

அவர் பதில் அளிக்கையில்-

கைது செய்யப்பட்ட 747 சந்தேக நபர்களில் 100 சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 14 வழக்குகள் தொடரப்பட்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட விவரங்கள் மற்றும் மேலதிக விவரங்களின் பிரகாரம் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவற்றில் வெளிப்படும் தகவல்களின் பிரகாரம் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெறும்.

புதிய அரசாங்கத்தின் கீழ் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளும் புதிய கோணத்தில் ஆரம்பமாகியுள்ளன. கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி விசாரணைகள் தொடர்பிலான தகவல்களை நீதிமன்றில் சமர்ப்பித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.

12 சிவில் சாட்சியாளர்கள், 7 இராணுவ உறுப்பினர்கள், 26 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் 3 பேர் அடங்களால் 48 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. உரிய விதிமுறையின் கீழ் விசாரணைகள் இடம்பெறுகின்றன - என்றார். (அ)

# புதிய அரசியல் கலாசாரத்துக்காக அர்ப்பணிப்போடு செயல்படுவோம்

### சஜித் பிரேமதாஸ சபையில் அழைப்பு

கொழும்பு, ஜன. 08

புதிய அரசியல் கலாசாரத்துக்காக அர்ப்பணிப்போடு செயற்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

புது வருடத்தின் முதலாவது பாராளுமன்ற அமர்வில் நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதில், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கேந்திர ஸ்தானமாக, உயரிய பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு தனித்துவமானதொன்றாகும்.

வெறும் கோஷங்களுக்கு சுருங்கிப் போகாது, புதிய அரசியல் கலாசாரத்தின் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் நிறைவேற்றப்படும், மக்கள் சார் அரசியல் கலாச்சாரத்தை உருவாக்க நாடாளுமன்றத்திலுள்ள அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார். (அ)

# பொய் கூறி மக்களை ஏமாற்றியுள்ளது அரசு

### எதிர்க்கட்சி சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 08

தேர்தல் காலத்தில் அரசாங்கம் கூறிய விடயங்களுக்கும் அவர்கள் நடைமுறைப்படுத்தும் தீர்மானங்களுக்கும் இடையில் பாரிய இடைவெளிகள் இருப்பதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வருட ஆரம்பத்தின் நிதி நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிவப்பு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை 220 ரூபாவாகவும் நாட்டு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை 230 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள சூழலில் 265 ரூபாவாக்கு சிவப்பு அரிசி விற்கப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தெற்கில் வாழும் நாம் சிவப்பு அரிசியைதான் தினமும் உண்கிறோம். சிவப்பு அரிசியை நாம் உண்கிறோம் என்பதால் எமக்கு சிவப்பு அரிசியைத்தான் வழங்க வேண்டும். ஆனால், சந்தையில் சிவப்பு அரிசி இல்லை.

இந்த அரசாங்கம் அமையப்பெற்று மூன்று மாதங்கள் கடந்துள்ளன. இப்போது அரிசி இல்லை எனக் கூற முடியாது. சிவப்பு அரிசியை இறக்குமதி செய்திருக்கலாம். ஆனால், செய்யவில்லை. தற்போது நாட்டில் அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நெல்லுக்கான கொள்வனவு விலையாக 110 ரூபாவை நிர்ணயிக்க உள்ளதாக தெரியவருகிறது. தேர்தல் காலத்தில் இந்த அரசாங்கம் மக்களுக்கு பொய்களை கூறியே ஏமாற்றியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாள்கூட 130 ரூபாவுக்குதான் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால், விவசாயிகளுக்காக போராடுகிறோம் எனக் கூறியவர்கள் 110 ரூபாவுக்கு நெல்லை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளனர் - என்றார். (அ)

# இலங்கையின் மதிப்பை உயர்த்துவதே பொறுப்பு

### புதிய தூதுவர்களிடம் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 08

சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் பிம்பத்தை உயர்த்துவது தூதுவரின் பொறுப்பு என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கான புதிய இராஜதந்திரிகளை நியமிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி அநுரகுமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இராஜதந்திர சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இலங்கையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் இருந்ததாகவும், புதிய நியமனங்களை பெற்ற இராஜதந்திரிகளிடம் இருந்து அவ்வாறானவற்றை எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயற்படுமாறும் அந்த நாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் சேவைகளை வழங்குவதற்கு முன்னின்று பாரபட்சமின்றி நியாயமாக செயற்படுமாறும் ஜனாதிபதி புதிய இராஜதந்திரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இலங்கைப் பணியாளர்கள் தொழில் புரியும் மத்திய கிழக்கு, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இராஜதந்திர சேவைகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன் இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் பணியை இராஜதந்திர சேவையின் ஊடாக மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கென ஜனாதிபதி அநுரகுமார 05 தூதுவர்களை நியமித்த நிலையில் இராஜதந்திர சேவையில் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் இவ்வாறு இராஜதந்திர சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கட்டார் நாட்டின் தூதுவராக ஆர்.எஸ்.கான், அசாத்

ரஷ்ய தூதுவராக திருமதி எஸ்.கே. குணசேகர, குவைத் தூதுவராக எல்.பி. ரத்நாயக்க, எகிப்திய தூதுவராக ஏ.எஸ். கே.செனவிரத்ன, நியூசிலாந்து தூதுவராக டபிள்யு.ஜீ.எஸ். பிரசன்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## புலம்பெயர்...

நாட்டுக்கு வரவழைக்க நடவடிக்கை எடுங்கள்.

அத்தோடு அனர்த்தங்களின்போது அரச ஊழியர்களின் குடும்பங்களையும் கவனத்தில் எடுங்கள்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# குழுவின் அறிக்கையின் பின் அர்ச்சுனா குறித்து தீர்மானம்

கொழும்பு, ஜன. 08

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி குறித்து குழுவொன்றின் விசாரணையின் பின்னரே தீர்மானிக்கப்படும் என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் சபாநாயகர் இதனை கூறினார்.

குழுவொன்று அர்ச்சுனாவின் செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்கின்றது. அதன் அறிக்கையை அடிப்படையாக வைத்து பாராளுமன்றத்தில் அவரின் எதிர்காலம் குறித்து தீர்மானிக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார். (அ)

# சபையில் உரையாற்றுவதற்கு எனக்கு நேரம் ஒதுக்கவில்லை

## அர்ச்சுனா எம்.பி ஆவேசம்

கொழும்பு, ஜன. 08

பாராளுமன்றில் தமக்கு உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவதில் தொடர்ந்தும் சிக்கல் நிலவுவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் இந்த விடயத்தில் தலையிட்டு உடனடியாக தீர்த்து வைக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவர் பாராளுமன்றில் உரையாற்றுவதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் இருக்கும் நிலையில் அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சபாநாயகரின் அறிவுறுத்தல் கிடைக்கப் பெற்ற போதும், எதிர்க்கட்சித் தலைவர் அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை என அர்ச்சுனா குற்றம் சுமத்தினார்.

தாம் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து பாராளுமன்றில் அமர்ந்து மேலே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீடு செல்வதற்காக வரவில்லை என்றும், உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் பாராளுமன்றம் வந்து பயனற்ற நிலைமை இருப்பதாகவும் அர்ச்சுனா குறிப்பிட்டார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க, இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் உள்ளிட்ட தரப்பு கலந்துரையாடி இருப்பதாகவும், இந்த விடயத்தில் சபாநாயகரின் அறிவுறுத்தலுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். (அ)

# கூட்டுறவுச் சங்கங்களில் மிகப்பெரும் மோசடிகள்!

## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 08

நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீரவின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த காலங்களில் பொறுப்புடன் இயங்கவில்லை. நாட்டில் உள்ள நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஆறு கூட்டுறவு சங்கங்களிலும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

மஹரகம, கம்பஹா, உக்குவளை உள்ளிட்ட அனைத்து சங்கங்களையும் இங்கே குறிப்பிடலாம்.


இதனை சட்ட ரீதியாக தீர்க்கவேண்டும். குறிப்பாக மில்லியன் ரூபா பெறுமதியான வைப்புகள் தேக்கி வைக்கப்பட்டுள்ளன.

இது மிகப் பெரிய பிரச்னையாகும். இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கணக்காய்வுகளும் இடம்பெறுகின்றன.

விசாரணைகளின் நிறைவில் மோசடிகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது நிச்சயமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

# பொலிஸ், காணி அதிகாரங்களை வடக்கு மக்களுக்கு வழங்கக்கூடாது!

## அரசிடம் வலியுறுத்துகிறார் ராகுல தேரர்



கொழும்பு, ஜன. 08

**வடக்கு மக்களுக்குரிய வரப்பிரதாசங்கள் வழங்கப்படவேண்டும். ஆனால், பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கக்கூடாது என்று வனவாசி ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.**

இங்கிரிய பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

வடக்கில் சிறு பிரச்னை இருப்பதாக உணரமுடிகின்றது. அங்குள்ள மக்களுக்கு வரப்பிரசாதங்கள் வழங்கப்படவேண்டும். இந்த நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களைத் தவிர ஏனையவற்றை வழங்கலாம்.

இலங்கையென்பது சுயாதீன நாடு. நாம் இந்தியாவின் கைப்பாவையாகவும் மாறக்கூடாது. வெளிநாட்டு தொடர்புகள் அவசியம். அதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதாக மாற்றவேண்டும்.

வெளிநாட்டு தூதரக சேவைகளில் உள்ளவர்கள் மாற்றப்படவேண்டும். சிறப்பாக வேலை செய்யக்கூடியவர்களை நியமிக்க வேண்டும் - என்றார். (அ)

# தமிழகத்தில் தஞ்சம் அடைந்த 13 குடும்பங்கள் தம்மை இலங்கைக்கு அனுப்புமாறு கோரி மனு!

சென்னை, ஜன. 08

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை அகதிகள், தம்மை இலங்கைக்கு அனுப்பக் கோரி, இந்தியா - இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனு கையளித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை தமிழர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் இலங்கையிலிருந்து படகு வழியாக சட்ட விரோதமான முறையில் தனுஷ்கோடியில் தஞ்சம் அடைய தொடங்கினர்.

இதுவரை 309 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடியில் கடல் வழியாக அகதிகளாக தஞ்சமடைந்து மண்டபம் ஈழத்தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக தஞ்சமடைந்த இலங்கை தமிழர்களை அகதிகளாக இந்திய அரசு இதுவரை பதிவு செய்யாத காரணத்தினால், அவர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் எந்த விதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் அகதிகளாக பதிவு செய்யாமல் உள்ள 13 குடும்பத்தினர், படகு மூலம் அல்லது விமானம் மூலம் தம்மை இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறு கோரி நேற்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கையளித்துள்ளனர்.

இதேவேளை, முகாமில் வருவாய் இன்றி தவித்த ஐந்து குடும்பத்தினர் அண்மையில் சட்ட விரோதமாக கடல் வழியாக இலங்கைக்கு திரும்பிச் சென்றுள்ளதாகவும் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

# இலங்கைக்கு வந்த ரோகிங்கியா அகதிகள் ஆள்கடத்தல் கும்பலிடம் சிக்குண்டவர்கள்!

## இலங்கையர் ஒருவரும் பின்னணியில் பொது பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 08

இலங்கைக்கு படகு மூலம் வந்துள்ள ரோகிங்கியா அகதிகள் உண்மையில் வேறு ஒரு பகுதிக்குச் செல்லதிட்டமிட்டிருந்தவர்கள். அவர்கள் ஆட்கடத்தல்காரர்களிடம் சிக்குண்டவர்கள் என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

இலங்கையின் குடிவரவு கொள்கையை மீறியமைக்காகவே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள அமைச்சர், இவர்களில் 12 விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டார்.

இது ஆட்கடத்தல் தவிர வேறு எதுவுமில்லை என தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், இதன் பின்னணியில் இலங்கையர் ஒருவர் இருக்கவேண்டும். இந்த பகுதி ஊடாக இவர்கள் ஐரோப்பாவுக்கு சென்று கொண்டிருந்தார்கள் என சந்தேகம் நிலவுகின்றது என கூறினார்.

இந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு பலர் முன்வந்துள்ளமை குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், இவர்கள் அகதிகள் என குறிப்பிடப்பட்டாலே மனிதாபிமான உதவிகளை வழங்க முடியும் என தெரிவித்தார். (அ)

# சில ஊடகங்களின் பெயரில் வெளிச்சம் ஆனால் உள்நோக்கம் இருளாக உள்ளது

## கூறுகிறார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜன. 08

நாட்டைத் தூய்மைப்படுத்துவதை சில ஊடகங்கள் விரும்பவில்லை. சில ஊடகங்களின் பெயரில் வெளிச்சம் இருந்தாலும் அதன் உள்நோக்கம் இருளாக உள்ளது. இதற்காக எம்மால் ஒன்று செய்ய முடியாது என என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை ரயில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை கட்டியெழுப்பும் நோக்கில் அனைத்துத் துறைகளையும் சீரமைக்கும் தேசிய வேலைத்திட்டம் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த செயற்றிட்டத்தில் ரயில் திணைக்களமும் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும். அதே போன்று ரயில்வே துறையை கட்டியெழுப்ப நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

இந்த துறையில் உள்ள பிரச்னைகளுக்கு எம்மால் தீர்வு காணமுடியும். 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் ஊடாக இந்தத்துறையை மேம்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். எனினும் நாடு தூய்மைப்படுதப்படுவது சில ஊடகங்கள் விரும்பவில்லை.சில ஊடகங்கள் உள்ளன.அந்த ஊடகங்களின் பெயரில் வெளிச்சம் இருந்தாலும் அதன் உள்நோக்கம் இருளாக உள்ளது.

இதற்காக எம்மால் ஒன்று செய்ய முடியாது. நாம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மக்களிடத்தில் கோரவில்லை. ஆனால் நாட்டு மக்களுக்கு புதிய மாற்றம் தேவைப்பட்டுள்ளது. முழுமையாக சுத்தப்படுத்தி எமக்கு விசேட மக்களாணையினை பெற்றுக் கொடுத்துள்ளனர்.நாட்டை தூய மைப்படுத்தவே மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர்.

நிச்சயமாக இந்த நாட்டை நாம் தூய்மைப்படுத்துவோம். ஊடகங்களும் தூய்மைப்படுத்தப்படுவது சிறந்தது. ஊடகங்கள் எதைக் கூறினாலும் எமது செயற்றிட்டங்களை நாம் நிறுத்த போவதில்லை. எமக்கு விசேட மக்களான கிடைத்துள்ளது. அதற்கேற்பவே நாம் செயற்படுவோம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org